# சின்னச் சின்னப் பூக்கள்

கவிஞர் கவிவளவன்

எழுத்துக்களம்
வெளியீட்டகம்

# சின்னச் சின்னப் பூக்கள்!

கவிஞர் கவிவளவன்

எழுத்துக்களம் வெளியீட்டகம்
செம்பாக்கம், **சென்னை**–600 073

**உரிமை:** ஆசிரியருக்கே
முதல் பதிப்பு: டிசம்பர் **2020**
திருத்தங்களுடன்: **மார்ச் 2021**
**© பதிப்புரிமைப் பெற்றது!**

Please visit **www.thadaakam.co.in.** a web magazine

**மின்நூல்—ரூ10.00/அன்பு**
**தாள் நூல்—அச்சில்**

**ஒளியச்சுக் கோவை, நூல் வடிவம்**
**K P Asokan, M.A., M.Sc., M.B.A., M.C.A., LLB**

இது ஓர்
**எழுத்துக்களம்** வெளியீடு
22, ஆர்.பி. அவின்யூ முதல் தெரு
**செம்பாக்கம், சென்னை – 73.**
**அலைபேசி : 99400 61280**

வணக்கம்,

எழுத்துக்கலை ஒரு தவம். எழுதுதல் இறைவன் அளிக்கும் தனிக் கொடை. அதனினும் கவிதை புனைதல், பெருங்கொடை. சிந்தை யோட்டங்கள், சொற்களாய்க் குவியும், அவை மனக் காட்சியின் படிமங்கள். வெவ்வேறு, காலக் கட்டங்களில், தோன்றியப் பதிவுகளை நூல் வடிவம் காண முற்பட்ட போது, சின்னஞ் சிறிசுகளாய், இருந்தனவற்றையும், ஒரு சிறுவடிவ கவிதைத் தொகுதியாக்கும் செயலே இந்நூல். இவ்வகையில் இது மூன்றாவது நூல். என்றாவது, எந்நிகழ்விலாவது, பரிசு நூலாக வழங்கும் நிலைப்பாட்டின் செயல்வடிவமே இது. குறுகியக் காலத்துள் எழுதிக் குவித்தக் கவிதைகளே இதனுள் அதிகம். அவை, மிகுதிக்கண் **சொல்வனம்** என்னும், மின்னிதழுக்கு எழுதப்பட்டவை. **சர்ரியலிஸம்** எனும் கோட்பாட்டுச் சிந்தையாவே அவர்கள் தேர்வு செய்யும் படைப்புகள் இருக்கும். அதனை, உண்மைநிலை என்பர். அங்ஙனம் எழுதுதற்கு, மனத்தில் தோன்றியவண்ணம், எந்தவொருக் காட்சிப் படிமமோ பின்னூட்டமோ இல்லாது எழுதியவையே அப்படைப்புகள். 2020-ம் ஆண்டின், ஏப்பிரல், மே ஜூன் ஆகியத் திங்கள்களில் பிறந்தவை அவை. இவற்றுடன் 29-04-2013 அன்று எழுதிய ஆறு கவிதைகளுடன், சில புதியனவும் உண்டு. வழக்கம்போல், நூல் வடிவம் செய்து வெளியிடும், என்னுடைய இல்லாளுக்கும் நன்றி! படித்துச் சுவைப்போருக்கும் நன்றி!!.

**சென்னை**—73 **அன்புடன்,**

**நாள்**: **12-12-2020** **கவிவளவன்.**

# ஆசிரியரின் பிற நூல்கள்!

## தாள் நூல்

1. அழியாச் சொப்பனங்கள் - கவிதைகள் (மரபு மீறல்) ரூ.75/-
2. மனம் பூத்த மலர்கள் - கவிதைகள் (மரபு மீறல்) - அச்சில்

## மின்நூல்

3. நவீன ஆத்திசூடி - விலை - அன்பு
4. முகநூல் சுவடுகள்- தொகுப்பு- விலை - அன்பு
5. வித்தாகும் விழுதுகள் - கவிதைகள்(மரபின் வழியில்) ரூ.40/-
6. சிந்திய முத்துக்கள் – கவிதைகள் (குறுநூல்) ரூ.10/அன்பு
7. கரவா ஒளிச்சுடர் -கவிதைகள் (குறுநூல்) ரூ.10/அன்பு
8. சிந்தனைக் கோலங்கள்—கவிதைகள் (மரபின் வழியில்) - ஒளி அச்சில்
9. தேடிய கலன்கள்—கவிதைகள்(குறுநூல்) - ஒளி அச்சில்
10. மனக் கீற்று—கவிதைகள் (குறுநூல்) ஒளி அச்சில்
11. முகவரி தேடும் அகவரிகள் கவிதைகள் (மரபு மீறல்) - ஒளி அச்சில்
12. விழுமிய வேர்கள் (மரபின் வழியில்) ஒளி அச்சில்
13. கண்டதும் கேட்டதும்- கட்டுரை(ஒளி அச்சில்)
14. தீர்க்க தரிசனம்—கட்டுரை(ஒளி அச்சில்)
15. ஒளிதரும் ஓசைகள்-(இசைப் பாடல் - ஒளிஅச்சில்)

செங்கோட்டைப் பாசஞ்சர் சிறுகதைகள் (அச்சில்)

இவற்றுடன்,
**கனவின் ஓசைகள்**
பதிவிறக்க—ரூ 45/-
அஞ்சலில் ரூ 85/-

# போற்றுவேன்!



ஒளியாய்; ஒலியாய்; உழலும்
வாழ்வின், உன்னத நிலையாய்;
வளியாய், உயிராய் வாழ்வின்
கலனாய்; ஊனையும் நிறுத்தும்;
எளியார் மனமும் ஏந்திடும்
நிறையாய் நின்றதாம் திருவடி!
அளித்தநற் கொடையாய் அருந்தவத்
தமிழால் போற்றுவேன் மகிழ்ந்தே!


**14-06-2020**

# மனைவி!

இருபதின் வழியில் தேவதையாய் நின்றவள்!
முப்பது நிறைகையில் முகவரித் தந்தவள்!
நாற்பதின் தொடக்கத்தில் நச்சரிப்பானவள்!
ஐம்பதில் நாமே அனுசரித்துப் போய்விட,
அறுபதின் தொடக்கத்தில் அன்பால் நிறைவாள்!
உருபெறும் வாழ்வின் உன்னதக் காலம்;
எழுபதைத் தொட்டபின் எழுந்து நிறையும்!

**14-06-2020**

==#==



# இணங்கி மகிழுங்கள்!

பழுதிலா உடலும் பக்குவ நிலையும்;
எழுதிடும் வாழ்வின் இயன்நிலைத் தானே!
சூழும் இன்பத்தைச் சொந்தமாக்குங்கள்!
இல்லற வாழ்வை இணங்கிக் கொள்ளுங்கள்!
ஆளும் மனத்தில் ஆண்மையைத் தேடாதீர்!
அவனியில் யாவும் இயன்நிலை யாகும்!
மனமே அறிவின் கொற்ற மன்றோ!
மகிழ்வுடன் நிறைந்து என்றும் வாழுங்கள்!

**14-06-2020**



## சிறகுகள்!

இறகுகள் உதிராத வரை,
சிறகுகளாய்;
காற்றின் எதிர் திசையிலும் ஏகும்!
உதிர்ந்தால்,
காணாமல் போகும் காற்றில்!
மனித மனச் சிறகுகளும் தான்!


**29-04-2013**



## தூரிகை!

வண்ணந்தீட்டும் மனத்தோடு,
வாத்சல்யமாவது!
அழகைக் கூட்டும்,
அற்புதத் தோழன்!
கீழ்த்தரமான, கிறுக்கல்களுக்கும்;
துணையாவதுண்டு!


**29-04-2013**



# காலம்!

நிகழ்வுகளைப் பிரதிபலிக்கும்!
நினைவுகளை அசைபோடும்!
இளமை, முதுமைப்
பரிணாமங்களை,
ஊசலாடும் நெஞ்சுக்குள்;
உறவாய்க் கூட்டும்!
மருந்தில்லா மகத்துவம் கொண்ட,
இயற்கையின் தூதுவன்!


**29-04-2013**



# கூச்சல்!

உயர்திணை, அஃறிணையாகும்;
செயப்பாட்டுவினை, செய்வினையாகும்!
இரட்டைக் கிளவி, அடுக்குத்தொடர்;
அளப்பறிய சாகசம் புரியும்!
இதுவும் மொழியோ என்று,
இயற்கையே வருத்தமுறும்!
கூச்சமிலாச் சொற்களின்,
வெளிப்பாடு;
கூச்சலாகி நிற்கும்!
அது, சண்டையெனும்,
சாக்கடையில் தான்!

**29-04-2013**



# மௌனம்!

அளந்து பேசும்;
ஆயிரம் மொழிகளின் தூதுவன்!
உண்மையின் கால்களை;
பொய் மறிக்கும் போது,
சாட்சியாய் நின்று,
சங்கடப் படுத்தும்!
சிறுமதியாளர்களைச்
சிந்திக்கச் செய்யும்!
உண்மையின் விளிம்பில்,
எப்போதும் நின்று,
புன்னகைப் பூக்கும்!

**29-04-2013**



## கனவு!

காலத்தின் மாயக்கண்ணாடி!
ஒவ்வொரு நாளும்,
புதியத் திட்டங்ளைப் பிறப்பிக்கும்!
காலம் கரைந்தாலும்,
நினைவுப் பொதிகளில்;
நிறைகுடம்!
மண்ணுலகில் மனிதனை,
வாழ வைக்கும் ஒரே மருந்து!

**29-04-2013**




# கனவு!

எதுவோடு எதுவும்
இணைந்து கொள்ள,
ஒன்றை எழுதும்,
ஒன்றைத் திணிக்கும்!

ஆழ்மனம்,
சூட்டியக் காதல்!
முகமில்லா
முகவரிக்கும்,
கடிதம் எழுதும்!


**(16-04-2020)**



## வாழ்க்கை!

நிழலாடிய முகங்கள் பலநூறு!
நினைவோடிய முகங்கள் சில நூறு!
மனம் சூடிய முகங்கள்,
வெகு சிலவே!
இதுதான் வாழ்க்கை!
தெளிவில்லாதத் தேடலில்;
தொடர் பயணம்....!

**12-05-2020**




## தேடும் மனம்!

வேதனையும் மவுனிக்கும்,
விருப்பங்கள் சூட்டிய தீப் பந்தில்!
வடுக்கள் ஆறாத புண்களாய்,
மூச்சுக் காற்றில் முகவரி தேடும்!
இதுவும் கடந்து போக,
அதுதான் வாழ்க்கை!

**12-05-2020**





## தோள் வலி!

ஏதோ ஒன்றில்,
எழுதா முகவரி!
கண்களில் பனி!
மனம் தேடிய
வினாக்களின்,
தூசு கண்களில்!

**12-05-2020**

## விழலுக்கு நீர்!

# வேலி மேய்ந்தபயிர்,
விழலின் நீர்க் கோடு!

# காற்று,
நோக்கும் திசையிலெல்லாம்,
வருடி வறுக்கும் சூரியனின்,
நிழலில்,
மனித முகம் தேடும்!

# ஞானச் சூரியன்கள்,
காலம் விழுங்கியக்
கலம் தேடும்!



எல்லையில் கோடாய்,
எல்லாம் தெரியும்! **(09-05-2020)**

# கார்கில் போர்!

கார்க்கில் பகுதியிலே களம் காணும் வீரரெலாம்,
நாட்டுப் பற்றினையே நன்நெஞ்சில் தேக்கி நிற்பர்!
வீட்டுக் குழம்பினிலே வீறுநடை போடுமென் நண்பர்;
நாட்டுக்குப் போரிடவும் எங்கவிதை ஆகுமென்றார்!
போர்க்கவிதை ஆகுமென்றால் புறப்படுவேன் நானுமின்றே!
எங்கவிதை உலகாள எம்நாடும் சிரம் ஏகும்!
தீங்கதைகள் பேசாதீர்!; திடந்தோளர்;
மாங்கனியும் உண்ணாமல், மரக்கறியும் உண்ணாமல்,
நாட்டுக்காய் உழைக்கின்றார்! நாமும்தான் நினைப்போமே!

**09-07-1999**



# பசியின் அறம்!

மேளம் முழங்க,
வரிசங்கம் நின்றோத,
உண்டும் உண்ணாமலும்,
சுருட்டிச் சேர்த்த இலைகள்!

மகிழுந்து மடியில்,
தொட்டியில் விழ,
நாய்களோடு,
சில மானுடக் கரங்கள்!

**(22-04-2020)**



## வெகுஜனப் போர்வை!

கொத்தாய்ச் சொற்களை;
ஏற்ற இறக்கமுடன்,
பொருள்வழித் தேடாமல்,
அடுக்கி வைத்தால்,
வெளிவரும் இதழினில்!

அறிவின் சுடருக்கு,
அங்கு வேலையில்லை!
அதுதான் வெகுஜனம்!

*(23-04-2020)*



## தாய்!

பசிக்கு அமுதூட்டி,
பார்த்துப் பார்த்து வளர்த்து,

பதின்ம வயதில்,
வாயிலில் நின்று;
பள்ளியிலிருந்துப்
பிள்ளையின் வரவைத்
தேடியத் தாய்,

இன்று,
முதியோர் இல்லத்தின்,
வாயிலில்,
உணவு மணிக்காய்!

**கவிவளவன் (22-04-2020)**



## கவிதை!

எழுத்தின் ஆட்சி,
வெளிப்பாட்டின் அடித்தளம்!
எண்ணங்களின் ஊற்று!

பதிப்புரிமை,
சொல்லப் படுவது அல்ல,
சொல்பவரே நிலை!

அல்லது,
தேர்வு செய்பவர்;
அறிவுக்கலன் கொள்ளும்!

**(22-04-2020)**



# இயன்நிலை!

வழுக்கியக் கைத்தடி தரையில்,
காலால் உதைபட்டக் கரங்கள்;
தோள்களில்!

மகரந்தச் சேர்க்கையில்,
வண்ணத்துப் பூச்சிகளின் ரிங்காரம்;

கொய்தமலர்,
சிவந்த கன்னங்களைச்
சேர்த்தணைத்தக் கூந்தலில்!

மண்ணில் மழை!
கண்ணீரோடு,

அண்ணாந்து முகர்ந்த உழவன்! (22-04-2020)



## பத்திரிகை கவிதை?

சொற்களின்,
சுவையல்ல, கவிதை!
பொருளின்,
நிலையல்ல கவிதை!
பதிப்பிப்போரின்,
மனமே அதன் நிலை!
படிப்போரும் அது குறித்து,
ஆகா என்றுரைத்தால்;
அதுவே நற்கவிதை!

**(23-04-2020)**



## காதல்!

கண்கள் பேசின!
வாய் மொழியாச்
சொற்களை;
மனம் பதிப்பித்தது!

**12-05-2020**





## நடந்த கால்கள்!

ஓசையின்றி நடந்தேன்,
தடம் தெரியாது...!
ஷூக்களை மூடிய,
சகதிக்குள் தடம் ஏது?
தடுமாற்றம்
வாழ்வைப்போல்!
எதுவும் பதியவில்லை!

***08-06-2020***

## காலப் பூச்சிகள்!

கனவுகள் தேடாத மனத்தில்;
துளிர்த்த உணர்வுகள்,
தூக்கியெறிந்த சொற்களில்,
சிதையும்!
சுயம் தேடாத மனம்;
தன்னையே மாய்த்துக் கொள்ளும்,
காலப் பரிணாமத்தில்,
செத்துவிட்டச் சிந்தனைகளாய்!
**28-06-2020**





## தோரணம்!

வாரணம் ஆயிரம்!
தோரண வாயிலில்,
சமத்துவக் கனவுகள்
பூகோளப் பதிவோடு!

***08-06-2020***

## தேயாத கோடு!

மீட்டாத வீணையொலி,
கேட்காதப் பேரிரைச்சல்,
அமைதியில் மனம்!
எதைத் தேடும்!

***08-06-2020***

## மரணம்!

நிகழ்ந்து கொண்டேயிருக்கும்,
ஒரு தொடர் பயணம்!
தெரியாத வாழ்வியலின்,
தெரிந்த இயன்நிலை!
யாரோ; எவரோ; அவரோ; இவரோ;
அவரோ எனும் நிலை,
அந்தகக் கனவின்,
மடியிட்ட கனம்! ***28-06-2020***





## வானத்துப் பூச்சி!

மின்மினியே,
ஒளியென்று
ஓய்ந்துவிட்ட,
பார்வைக்குப் புலப்படாத,
மின் மினியாய்,
சிரிக்கும் நட்சத்திரங்கள்!
***28-06-2020***

## கல்யாணம்,

முழங்கிய மேகத்துக்கு அப்பால்,
பூச்சொரியும் பூகோளப் பரப்பு!
கொட்டிய மேளம்,
மின்னலாய்,
கனவுகளைப் பிரசவிக்கும்!

**08-06-2020**






## பணம்!

கைகளில், தவழ்ந்து,
தேவையையும் தேடலையும்,
சீராக்கும்!
கழுதைக்கு காணாது,
ஒருவாய்க்கு!

**08-06-2020**

## பொங்கல் வாழ்த்து!



வையகம் போற்ற வாழ்ந்து,
    வளமெலாம் பெற்ற பின்னும்;
பொய்யகம் காணா மாந்தர்,
    பொலிவுடன் கண்ட நன்நாள்!
‘தை’யவள் பிறக்கும் நாளில்,
    தகைவுடன் பூசை செய்து,
மெய்யென நிலவும் இயற்கை;
    மேவிட நன்றி சொல்வார்!



நன்றியை வாழ்வின் தோளாய்;
    நட்புடன் கொண்டதாலே,
பின்வரும் நாளில் தமக்குப்
    பெரும்பணி செய்த இனத்தைப்
பொன்னெனக் காத்து நலமாய்,
    பூசையும் செய்து மகிழ்வர்!
தன்னெனப் போற்றும் மரபைத்
    தகைவுடன் வளர்த்து வாழ்வோம்!

**13-01-2004**

# பொட்டுக்கடலை!

புரியாத ஒன்று, புரிந்ததாய்ப் பகர்தல்,
புதுக் கவிதையின் படிமம்!
எழுதியவன், அறிவானோ,
இயம்பும் பொருளை!
நீதியறியா நெடுங்கதையாய்,
பூக்கும் அது சர்ரியலிஸம்,
சோஷலிசம் அறியா,
அறிவுக்கண்ணின், ரியலிஸம்!

**08-06-2020**





# நினைவின் பூக்கள்!

கவிதையே நெஞ்சில் பூக்கும்;
காலத்தின் கதைகள் சொல்லும்!
செவிநுகர் கதைகள் எல்லாம்,
சுகமாய் நினைவு கொள்ளும்!
தவிர்த்திடும் மனத்தில் கூட;
தருமத்தாய் சாயல் காட்டும்!
குவிந்திடும் நினைவுக் கோலம்,
குளத்தின் நீர்க்கு மிழியாமே!
*10-03-2015*





## நூலாசிரியர் குறிப்பு

இந்நூலாசிரியர், இன்றையத் திருவாரூர் மாவட்டத்தைப் பூர்வீகமாகக் கொண்டவர். நடுவண்அரசில், சென்னையில், இடைநிலை அதிகாரியாகப் பணிபுரிந்து பணிநிறைவுப் பெற்றுள்ளார். அடிப்படையில், கணித மாணவர்; முதுநிலைப் பயின்றவர். மேலும், கணினிப் பயன் பாட்டியல், வணிக மேலாண்மை, தமிழ் இலக்கியம் ஆகியவற்றில் முதுநிலைப் பட்டத்தோடு, இளநிலைச் சட்டவியலும் பயின்று, தேர்ச்சிப் பெற்றுள்ளார். ‘கல்வியில் கரை இல’ என்பதாக விளங்குகிறார். எழுத்தும் எனக்கொருப் பிள்ளைதான் என்பார் இவர். இவருக்குச், ஜோதிடக் கலையிலும், ஈடுபாடு உண்டு. இவருக்கு, இதுவும் ஒரு வல்லமையாக விளங்குகிறது, எழுத்தாற்றலோடு, பேச்சாற்றலும் கொண்டவர். கவிதையோடு, கதை, கட்டுரை நாடகம் ஆகியவற்றிலும் இவருடைய படைப்புகள் உண்டு.

இவருடைய இசைப்பாடல் தொகுப்பு ஒன்று, “கனவின் ஓசைகள்” எனும் பெயரில் தற்போது, ஒலித்தட்டாக, வெளி வந்துள்ளது. இவர், எளிமையான தோற்றமும், அனைவரிடத்தும், இயல்பாகவும், அன்புடனும் நட்புடனும் பழகும் குணமுடையவர்.

**எழுத்துக்களம்** வெளியீட்டகம்

22, ஆர்.பி. அவின்யூ முதல் தெரு,
**செம்பாக்கம், சென்னை - 73**
**அலைபேசி: 99400 61280**

www.ezhuththukkalam.co.in

www.epublish.co.in